363

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.மு. மதிமாறன், பி.இ.,**

---

ந.க.எண். 7171/2019, மம 3

நாள். 06.06.2020

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - தேனி மாவட்டம் - உத்தமபாளையம் வட்டம் - கூடலூர் நகராட்சி - மேலக்கூடலூர் கிராமம் - சர்வே எண். 1986/2 மற்றும் 7-ல் உள்ள 12570 சமீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தமனம்பட்டி - மேகமலை தெற்கு திட்டப் பகுதியில் உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களுக்கு - தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1) ஆணையாளர், கூடலூர் நகராட்சிஅவர்களின் கடிதம், ந.க.எண்.1558/2019/எப்1, நாள்.27.05.2019.(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.30.12.2019.)
2) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம்,ந.க.எண்.905/TM/Theni/TPS/2019, நாள். 11.11.19.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை, நக.எண்.14465/2018/ஆ4, நாள். 07.02.2019.
4) வட்டாட்சியர், உத்தமபாளையம் அவர்களின் ஒப்படைப்பு சான்று ந.க.எண்.4295/2018/அ5, நாள்.11.12.2019.
5) செயற்பொறியாளர், வேளாண்மை பொறியாளர் (பொ), வேளாண்மைப் பொறியியல் துறை, தேனி அவர்களின் கடிதம் எண்.ஆ/2269/2018, நாள்.19.11.2019.
6) துணை இயக்குநர், புவி தொழில்நட்ப மையம், தேனி அவர்களின் கடிதம் எண்.295/mines/2019, நாள்.09.11.2018.
7) முதன்மை வன பாதுகாவலர், சென்னை அவர்களின் கடிதம் எண்.K.DIS.No.TS4/49622/2019, நாள்.25.02.2019.
8) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
9) அரசாணை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை, நாள். 4.2.2019.
10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.06.11.2019.
11) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.26.05.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது)

A-Hemalatha 20/8/20
FE

12) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம், நக.எண்.930/PS/தேனி/2019, நாள்.29.05.2020. (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது).

13) HACA குழுமத்தின் 73-வது நிகழ்ச்சி நிரல் பதிவு, நாள்.10.02.2020.

*****

**உத்தரவு :**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கூடலூர் நகராட்சி, மேலக்கூடலூர் கிராமம், சர்வே எண்.1986/2· மற்றும் 7-ல் உள்ள 12570 சமீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "A முதல் G" வரை" என எல்லையிடப்பட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தமனம்பட்டி - மேகமலை தெற்கு திட்டப் பகுதியில் உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானங்களின் பரப்பளவு விபரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

**Area Details**

Area of the Site - 12570.00 ச.மீ

OSR - 1280.08 ச.மீ

| S.No | Block Name | Ground Floor Area (Sq.m) | First Floor Area (Sq.m) | Second Floor Area (Sq.m) | Third Floor Area (Sq.m) | Total Area (Sq.m) | No. of Tenements |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Block A1-A3 | 32.67 x 3 = 98.01 | --- | --- | --- | 98.01 | 1 x 3 = 3 units |
| 2 | Block B1-B17 | 64.09 x 17 = 1089.53 | --- | --- | --- | 1089.53 | 2 x 17 = 34 units |
| 3 | Block C1 | 300.07 x 1 =300.07 | 300.07 x 1 =300.07 | 300.07 x 1 =300.07 | 300.07 x 1 =300.07 | 1200.28 | 8 x 4 x1 = 32 units |
| 4 | Block D1 | 441.26 x 1 = 441.26 | 441.26 x 1 = 441.26 | 441.26 x 1 = 441.26 | 441.26 x 1 = 441.26 | 1765.04 | 12 x 4 x 1 = 48 units |
| 5 | Block E1 | 532.68 x 1 = 532.68 | 532.68 x 1 = 532.68 | 532.68 x 1 = 532.68 | 532.68 x 1 = 532.68 | 2130.72 | 14 x 4 x 1 = 56 units |
| 6 | Block F1-F2 | 604.08 x 2 = 1208.16 | 604.08 x 2 = 1208.16 | 604.08 x 2 = 1208.16 | 604.08 x 2 = 1208.16 | 4832.64 | 16 x 4 x 2 = 128 units |
|  | Total Area | 3669.71 | 2482.17 | 2482.17 | 2482.17 | 11116.22 | 301 units |

R. Muniappan
EE

பார்வை 10-ல் கண்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வரைபடங்கள் TNCDBR - 2019-ன்படி விதிகளை நிறைவு செய்வதாலும் பார்வை 14-ல் காணும் HACA குழுமத்தின் 73-வது நிகழ்ச்சி நிரல் பதிவு ஒப்புதலின்படி மேற்கண்டுள்ளவாறு பரப்புகளுடன் கூடிய உத்தேச குடிசைமாற்று வாரிய தொகுப்பு வளர்ச்சி குடியிருப்பு கட்டுமானங்களின் கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.து.இ.(மம).எண்.22/2020 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் / நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

2. As per G.O. (MS) No.18, MA & WS Department date:04.02.2019 "OSR portion should be earmarked and kept open to sky without any construction with the condition that the open space reservation should be utilized only as a park.

3. However the space may be maintain by the owner concerned subject to the supervision and monitoring of the concern Local body.

4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6. அரசாணை எண். 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள். 05.02.2016- ன்படி உத்தேச குடியிருப்புக் கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

R. M[illegible]
FE

7. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u> :

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள 1280.08 ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.

R.J... 20/8/20

FE

14. "The Tamil Nadu Government in G.O.MS.No.112, Housing & Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act - 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with Real Estate Regulartory Authority".

பார்வை (8) மற்றும் (9) -ல் கண்ட அரசாணைகளின்படி பார்வை (12) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் விளம்பரப் பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணங்கள் ஆகியவை முழுமையாக பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முத்திரையிட்டு ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு வரைபடத்தொகுப்புகள் இறுதி ஒப்புதலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கட்டிட வரைபடத்திற்கு இவ்வுத்தரவில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கிட ஆணையாளர், கூடலூர் நகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக மனுதாரர் ஆணையாளர், கூடலூர் நகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

6/6/2020 6.6.20

**இணைப்பு**
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
இரண்டு தொகுப்பு.

**பெறுநர்**
ஆணையாளர்,
கூடலூர் நகராட்சி,
தேனி மாவட்டம்.

**நகல்**

1. நிர்வாகப் பொறியாளர்,
   தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
   மதுரை கோட்டம்,
   எண்.169, கே.கே.நகர் பிரதான சாலை,
   கே.கே.நகர்,
   மதுரை - 625 020.
   } கடித நகல் மட்டும்

R.Murugan
FE 20/8/20

2. தொழில்நுட்ப வைப்பறை
   (வரைபடங்கள் மற்றும் கடித நகல்) - 1

**கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:திரு.சொ.ஆறுமுகம்**

ந.க.எண்.1802/2016/எப்1

நாள்.24.07.2020

**பொருள் :** கட்டிட உரிமம் – கூடலூர் நகராட்சி – தேனி மாவட்டம் – இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–13, எல்.எப்.ரோடு, தம்மனம்பட்டி சர்வே எண்.1986/2 மற்றும் 7ல் மேலக்கூடலூர் தெற்கு கிராமத்தில் உள்ள12570 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேலக்கூடலூர் திட்டப்பகுதியில் அமையும் உத்தேச தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய அடுக்குமாடி 301 குடியிருப்புகள் கட்ட – கட்டிட அனுமதி வழங்கி – உத்திரவிடுதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14465/2018/ஆ4 நாள்.07.02.2019.
2. வட்டாட்சியர், உத்தமபாளையம் அவர்களின் ஒப்படைப்பு சான்று ந.க.எண்.4295/2018/அ5 நாள்.11.02.2019.
3. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.2394/உ.பொ(தி)/2018, நாள்.03.09.2019.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட ந.க.எண்.1802/2016/எப்1 நாள்.04.11.2019.
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.7171/2019,மம3 நாள்.06.06.2020.
6. இவ்வலுவலக இதே எண்ணிட்ட ந.க.எண்.1802/2016/எப்1 நாள்.02.07.2020.
7. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.905/TPS/PG/2019, நாள்.08.07.2020.
8. இவ்வலுவலக இதே எண்ணிட்ட ந.க.எண்.1802/2016/எப்1 நாள்.17.07.2020.
9. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.1329/AE(P)/2019, நாள்.17.07.2020.

*************

**உத்திரவு:**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–13, எல்.எப்.ரோடு, தம்மனம்பட்டி சர்வே எண்.1986/2 மற்றும் 7ல் மேலக்கூடலூர் தெற்கு கிராமத்தில் உள்ள12570 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மேலக்கூடலூர் திட்டப்பகுதியில் அமையும் உத்தேச தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய அடுக்குமாடி 301 குடியிருப்புகள் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களிடம் முறையான கட்டிட வரைபட அனுமதி பெற்றதன் அடிப்படையில் , கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது.

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

13 15

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் கட்டுப்பட்டுள்ள 1915.13ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தின் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் உபயோகிப்போர் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி வசதிகள் மற்றும் இதர வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.03.11.0ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
11. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
12. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.
13. இந்த உத்திரவு தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சட்டம் 1920ன் சட்டப்பிரிவுகளுக்கு உட்பட்டதாகும்.
14. பக்கத்து இடங்களில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
15. அனுமதிக்கப்பட்ட வரைபடத்தினையும், உத்திரவினையும் எந்த நேரத்திலும் வேறு பரிசீலனைக்கும் வரும் பொழுது காண்பிக்கத்தக்கதாய் கட்டிடத்தின் பொது இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
16. கட்டிடத்தில் யாதொரு மாற்றமும் செய்யும் முன்பே நகராட்சியின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

R. Muniasamy

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division

17. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி சட்டப்பிரிவு 283ன் படி அபராதமாக ஆண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ.50 வீதம் வசூலிக்கப்படத்தக்கதாகும்.
18. புதிய கட்டுமான இடம் மற்றவருக்கு ஆட்சேபகரமானதாக இருக்கக்கூடாது.
19. கழிவுநீர் செல்ல பாதுகாப்பான சாக்கடை சொந்த செலவில் சொந்த இடத்தில் கட்டப்பட வேண்டும்.
20. கட்டிடம் கட்டும் ஒவ்வொரு வீட்டிற்கும் கழிப்பிடம் கட்ட வேண்டும்.
21. புதுக்கட்டிடத்தில் குடியேறும் முன் நகராட்சியிடம் மேற்படி இடத்தில் குடியிருக்கத் தகுதியானதென்று சான்றிதழ் பெற்ற பின்னரே குடியேற வேண்டும்.
22. சமையல் அறையில் புகைபோக்கி வைக்க வேண்டும்.
23. கட்டிடம் கட்டுமிடத்தில் ஏதும் வில்லங்கம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பு ஏற்க வேண்டும். நகராட்சி பொறுப்பில் இந்த அனுதியை ஒரு ஆதாரமாக கருதக்கூடாது.
24. இந்த வரைபடத்தின் கண்ட கட்டிடம் கட்டப்படும் இடம் பின்னாளில் கட்டிடத்துக்கு சொந்தக்காரருக்கு பாத்தியமில்லை என்று தெரிந்தாலோ அல்லது புறம்போக்கு இடத்திலோ அல்லது வேறு அரசு சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் இடத்தில் கட்டப்பட்டதாக தெரிந்தாலோ கட்டப்பட்ட கட்டிடம் அகற்றுவதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்த வரைபட அனுமதி ரத்து செய்யபடும்.
25. இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதலாக கட்டிடம் கட்டக்கூடாது.
26. மாடிப்படிக்கட்டுகள் தங்களது சொந்த இடத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.
27. தெருவோரமாக வீட்டுக்கு முன்பாக 5 அடி அகலமுள்ள காலியிடம் இருக்க வேண்டும்.
28. கட்டிடத்தில் நகராட்சியின் முன் அனுமதியின்றி எந்தவிதமான மின்சாரம் அல்லது ஆயில் மோட்டார் அமைத்து தொழில் செய்யக்கூடாது.
29. கழிவு நீரைக் கடத்த செப்டிக் டாங்க் ஒன்று அமைக்க வேண்டும்.
30. கட்டிடம் கட்டி முடித்து வரி நிர்ணயம் செய்யப்படும் பொழுது மழைநீர் சேகரிப்புத் தொட்டி புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி

24-01-2020

**பெறுநர்:**
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
மதுரை கோட்டம்,
கே.கே.நகர் பிரதானசாலை, மதுரை–20.

**நகல்:**

1. ஆணையாளர் அவர்களின் மேஜைக்கு,
2. மேலாளர்(பொ) அவர்களின் மேஜைக்கு,
3. அ1, பிரிவு எழுத்தர் (உபரி),
4. நகமைப்பு ஆய்வர் , கூடலூர் நகராட்சி அவர்களின் நடவடிக்கைக்கு,
5. இருப்பு கோப்பு.

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. Madurai Division